Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி புரட்டாசி 17 ஆம் நாள் ஜ. அவ்வல் பிறை 26 (3-10-64) சனிக்கிழமை இதழ் 234



30 வருட நற்சேவையினால் மக்களின்
அமோக ஆதரவை பெற்றவர்
எம். எஸ். எம். ஜுனைட்
(மூக்குக்கண்ணாடி தயாரிப்பாளர்)
144, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

# மூன்று மொழிகளையும் மாணவர் பயிலவேண்டும்

## பிரதமருக்கு அனுப்பப்பட்ட பார்சலில் தோட்டா!

கொழும்பு, வெள்ளி

பிரதமருக்கு விலாசமிட்ட பொதியொன்றினுள் பாவிக்கப்பட்ட துப்பாக்கித் தோட்டாவும் பயமுறுத்தல் கடிதமும் கண்டெடுக்கப்பட்டன.

பிரதமருக்கு விலாசமிடப்பட்ட தபால் பார்சல் ஒன்றை, தெகிவளை தபாற்கந்தோர் தபால் அதிபர் சந்தேகத்தின்மீது திறந்து பார்த்தபோது, பாவிக்கப்பட்ட துப்பாக்கித் தோட்டா ஒன்றும், "இந்தப் பார்சல் கிடைத்ததும் நீர் உடனடியாக இறந்து போவீர்" என்ற வாசகம்கொண்ட பயமுறுத்தல் கடிதம் ஒன்றும் இருக்கக் காணப்பட்டன.

தபாலதிபர் உடனடியாக பொலிசுக்குத் தகவல் கொடுத்ததும் பொலிசார் தபாற்கந்தோருக்கு விரைந்தனர். பாவிக்கப்பட்ட தோட்டா இருந்ததால் அதில் அபாயம் எதுவும் இல்லையென்று பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார். பொலிஸ் இதுபற்றி புலன் விசாரணை நடத்துகிறது.

## பிரதமர் கெய்ரோ பயணம்

கொழும்பு, வெள்ளி

கெய்ரோவில் திங்கட்கிழமை ஆரம்பமாகும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மாகநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இன்று மாலை விமானத்தில் கெய்ரோவுக்குப் பிரயாணமானார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட பிரதமரை கவர்னர்ஜெனரலும் மந்திரிசபை அங்கத்தினர்களும் வெளிநாட்டு தூதுவர்களும் பெருந்திரளான மக்களும் வழியனுப்பிவைத்தனர்.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான மண்டலசார்பற்ற நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டில் இலங்கைப் பிரதமர் கலந்துகொள்வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் பிரதமரின் சுகவீனம் காரணமாக அவர் முன்னதாகவே செல்ல முடியவில்லை.

## "கெய்ரோ மகாநாடு நற்பலனை அளிக்கும் என நம்புகிறேன்"

### இந்தியப்பிரதமர் நம்பிக்கை

புதுடில்லி, அக். 2

இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர்சாஸ்திரி இன்று பகல் புதுடில்லியிலிருந்துகெய்ரோவுக்குப் பயணமானார். பாலம் விமானநிலையத்தில் அவர் பேசுகையில் கெய்ரோ மகாநாட்டின் முக்கிய அம்சம் சமாதானத்தைப் பராமரிப்பதே எனக் கூறினார். இந்தியா எந்த முகாமிலும் சேரவில்லை என்றும், சமாதானம், நல்லெண்ணம் ஆகிய முகாம்களிலேயே அது சேர்ந்திருக்கிறதென்றும் சாஸ்திரி தெரிவித்தார்.

இன்று திரு. சாஸ்திரியின் 60-வது பிறந்த தினமாதலால் அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்து பல வாழ்த்துச் செய்திகள் கிடைத்தன. சோவியத் பிரதமர் குருஷ்சேவ், ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, எதியோப்பிய பிரதமர்கள் உட்பட வெளிநாட்டுத் தலைவர்கள் அவருக்கு பிறந்ததின வாழ்த்துகள் தெரி

(2-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை ஊழியர் வேலைநிறுத்தம்

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

'டைம்ஸ் ஒவ் சிலோன்' குழு பத்திரிகைகளைச் சேர்ந்த பத்திரிகை நிருபர்கள், மற்றும் சில்லறை ஊழியர்களும் இன்று மாலை முதல் வேலைநிறுத்தம் செய்ய ஆரம்பித்தனர். குறிப்பிட்ட ஒரு காரணத்திற்காக வேலைசெய்வதென இவர்கள் இன்றுமாலை 6 மணிக்கு முடிவு செய்தனர்.

## முடிவு திகதி நீடிப்பு

கொழும்பு, வெள்ளி

வச்சாவழிப் பிரஜைகள் கமிட்டி விசாரணை முடிவு திகதியை செப்டம்பர் 28-ம் திகதியிலிருந்து அக்டோபர் 10-ம் திகதிவரை நீடித்துள்ளது. இந்த திகதிவரை விரும்பியோர் கமிட்டி முன் சாட்சியமளிக்கலாம்.

---

## டாக்டர்கள் வேலை நிறுத்தம்

### எந்நேரமும் நடைபெறலாம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க வைத்தியர் சங்கம், வைத்திய நிபுணர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த அரசாங்க வைத்தியர்கள் அக்டோபர் ஏழும் திக்திகருப் பின்னர் எந்நேரமும் வேலை நிறுத்தம் செய்யலாம் என அ. வை. சங்கத் தலைவர் டாக்டர் ஏ. டி. எஸ். போல் தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தம் 24 மணி நேரத்திற்கு மட்டுமே நடைபெறுமெனவும் வைத்திய நிபுணர்களும் அதில் கலந்து கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## பாஸ்போர்ட் படிவம் வழங்குவதில்கட்டுபாடு

கொழும்பு, வெள்ளி,

'பாஸ்போர்ட்' விண்ணப்ப படிவங்கள் விநியோகிப்பதில் குடியேற்ற இலாகா பெரும் கட்டுப்பாடு விதித்துள்ளது. நேரில் செல்லும் ஒருவருக்கு ஒரு படிவம் வீதமே கொடுக்கப்படுகிறது.

---

டெஸ்ட் கிரிக்கட்

## ஆஸி: 211 இந்தியா: 2 விக். 34

சென்னை, அக். 2

இன்று காலை சென்னை கோரு விளையாட்டரங்கில் ஆரம்பமான ஆஸ்திரேலியா-இந்தியா கிரிக்கட் டெஸ்ட்போட்டியில் பிற்பகல் 3மணிவரை ஆஸ்திரேலியக் கோஷ்டி 9 விக்கட்டுகளை இழந்து 210 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த முதல் டெஸ்ட்போட்டியின் முதல்ஆட்டத்தில் ஆஸ்திரேலியக் கோஷ்டி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இறுதியாட்டம்வரை இந்தியா இரண்டு விக்கட் நஷ்டத்திற்கு 34 ஓட்டங்கள் எடுத்தது.

## கல்லூரி பரிசளிப்புவிழாவில் நீதியரசர் புத்திமதி

யாழ்ப்பாணம், சனி

மொழிதான் அறிவின் கருவி என்றும், மொழிப் பிரச்னையை தீர்ப்பதற்கு சாத்தியமான ஒரே ஒரு வழி மாணவர் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும் மொழிகளையும் பயில்வதேயாகும் என்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேசுகையில் நீதியரசர் டாக்டர் தம்பையா தெரிவித்தார்.

இதில் கட்டுப்பாடு எதுவும் இருக்கக்கூடாதெனினும், மாணவர் விரும்பியவண்ணம் மும் மொழிகளையும் பயில வசதி செய்யப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நீதியரசர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:—

"பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களிடையே ஒழுக்க வீனங்கள் கூடிக்கொண்டுவருவதை நாம் காணக்கூடியதாயிருக்கின்றது. மாணவர்களிடையேயும், வாலிபர்களிடையேயும் சமய வழிபாடும் கடவுள் பக்தியும் அற்றுப்போவதே இதற்கு முக்கிய காரணம். பாடசாலைப் பொறுப்பாளர்களும், ஆசிரியர்களும் மாணவர்கள் சமயவழிப்பாதையில் செல்லக்கூடிய வகையில் போதனைகளையும் வழிவகைகளையும் செய்யவேண்டும்.

### பால்ய குற்றவாளிகள்

சமீப காலத்தில் யாழ்ப்பா

(6-ம் பக்கம் பார்க்க)

இ. போ. ச. வேலைத்தள

## காவலாளிகள்-மாணவர் கைகலப்பில் மூவர்காயமுற்றனர்

கொழும்பு, வெள்ளி

வெரஹெரவிலுள்ள இ. போ. ச. வேலைத்தளத்தைச் சேர்ந்த ஒரு காவலாளிக்கும் ஜெர்மன் பயிற்சி கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவனுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவு இருபகுதியினரிடையேயும் பெருத்த கைகலப்பில் முடிவுற்றது.

இதன் காரணமாக ஜெர்மன் பயிற்சி கல்லூரியைச் சேர்ந்த ஒரு மாணவன் குத்தப்பட்டும், இ. போ. ச. வேலைத் தளத்தைச் சேர்ந்த காவலாளிகள் இருவர் படுகாயங்களுக்குமுள்ளானார்கள். மாணவனுக்கும், காவலாளிக்குமிடையே ஏற்பட்ட சச்சரவு, மாணவர்களும் தொழிலாளர்கள் சேர்ந்த கோஷ்டிக்கும் காவலாளிகள் சேர்ந்த கோஷ்டிக்குமிடையே கைகலப்பாக மாறியது பொலிஸார் வருவிக்கப்பட்டனர்.

சம்பவத்தைத் தொடர்ந்து காவலாளிகள் வேலைநிறுத்தம் செய்தனர். அவர்கள் இன்று மாலை வேலைக்குத் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

மணிவாக்கு

துப்பாக்கி முனையில் நடக்கும் பொதுவுடைமைப் புரட்சிகளை நான் வெறுக்கிறேன். ஆனால் இருப்பவன் தன்னிடம் இருப்பதை இல்லாதவரோடு பங்கிட்டுக்கொள்ள வலுவில் முன்வராவிட்டால் இந்நிலை எப்படியும் நேர்ந்துவிடும் என எச்சரிக்கிறேன்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு புரட்டாதி மீ 17 உ (3-10-64)

## நியாயமானகோரிக்கை

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரான 'நாடற்றவர்' எனப்படுபவர்பற்றி இந்தியப் பிரதமருடன் இலங்கைப்பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தச் செல்லப் போகிறார். அப்போது அவருடன் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் காரணத்தினால் ஒரு அரசியல்கட்சியின் தலைவரும் செல்வதானால் சிறுபான்மையினரின் பிரதிநிதியும் ஏன் செல்லக் கூடாதென்பதற்கு எவ்வித நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று 'நாடற்றவர்' பிரச்னை பற்றி முதல்தடவையாகஒன்று சேர்ந்து ஆராய்ந்த சிறுபான்மை எம். பி.க்கள் கேட்டுள்ளனர். இக்கோரிக்கையில் நியாயம் இருப்பதை பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் அலட்சியம் செய்ய முடியாது.

'நாடற்றவர்களாக்கப்பட்டுள்ள' இந்திய வம்சாவளியினரின் தலைவிதியை நிர்ணயிப்பதற்காக இந்தியப்பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு இலங்கைப் பிரதமரின் தலைமையில் இலங்கையின் உத்தியோக ரீதியான தூதுகோஷ்டியொன்று இம்மாதம் புதுடில்லி செல்கிறது. இத்தூதுகோஷ்டியில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகாவும் செல்வது முடிந்த முடிபாகிவிட்டதாகக் கருதப்படுகிறது. திரு. டட்லி சேனநாயகா எதிர்க்கட்சித் தலைவர் மட்டுமல்ல, இலங்கை இந்தியர் பிரச்னையாக உருவெடுப்பதற்கு மூலகாரணமான ஐக்கிய தேசியக்கட்சி என்ற ஒரு அரசியல்கட்சியின் தலைவர். இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவர் இவ்விஷயத்தில் சிறுபான்மை சமூகத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்க முடியாது.

நாடற்றவர்பற்றி பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பிரதமர் ஆலோசனை செய்தார். இப்பிரச்னையில் சம்பந்தப்பட்ட நாடற்ற மக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிப்பவர்களை அவர் கலந்தாலோசனை செய்யாதது பெரும் குறைதான். பல்வேறு கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசனை செய்துவிட்டு ஒரு கட்சியின் தலைவரை மட்டும் தம்முடன் அழைத்துச் செல்வது தேசிய ரீதியில் இப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற பிரதமரின் நோக்கத்துக்கு மாறானதாகும். பிரச்னையில் சம்பந்தப்பட்ட 'நாடற்றமக்களின்' பிரதிநிதிகளையும் சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட பிரச்னையாதலால் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளையும் பிரதமர் தமது தூதுகோஷ்டியில் அழைத்துச் சென்றாலே இலங்கையை பூரணமாகப் பிரதிநிதித்துவம் வகிக்கும் உத்தியோக ரீதியான தூதுகோஷ்டியாக அது விளங்க முடியும். இல்லையேல் எதிர்க்கட்சித் தலைவரைச் சேர்க்காமல் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக பிரதமர் மட்டும் செல்லதேநியாயம்.

சிறுபான்மையினர் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னைக்கு நிரந்தரமான, சுமுகமான தீர்வு காண்பதற்கு சிறுபான்மையினரின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியம் என்பதைப் பிரதமர் உணருவாரென்றே நம்புகிறோம். சிறுபான்மை எம். பி.க்களின் இந்த நியாயமான கோரிக்கையை இந்த இறுதி நேரத்திலாவது அலட்சியம் செய்ய முடியாது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நன்மையான முறையில் டில்லிப் பேச்சுகளால் ஒரு தீர்வு ஏற்படுமென்று உதவிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஒரு நம்பிக்கை தெரிவித்தார். சம்பந்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளையும் தங்களுடன் அழைத்துச் செல்வதினால் இந்த நோக்கம் நிறைவேற அதிக உதவியாக இருக்கும்.

# மாவட்டசபைகள் அமைப்பதற்கு அதிகாரிகள் ஆதரவு

கொழும்பு, வெள்ளி

மாவட்ட சபைகள் உருவாக்குவதற்கு சகல அமைச்சுக்களின் நிரந்தரக் காரியதரிசிகளும் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளும் ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

இப்போதிருந்து வரும் கச்சேரி முறைக்குப் பதிலாக மாவட்ட சபைகளை அமைப்பது பற்றி உத்தியோக பூர்வமான கமிட்டி சமர்ப்பித்திருந்த அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிக்குமாறு ஐந்து அங்கத்தவர்களைக்கொண்ட மந்திரிசபை உபகமிட்டி இவர்களை அழைத்திருந்தது.

நிதிமந்திரி, உணவு மந்திரி, நீதிமந்திரி, ஸ்தலஸ்தாபன உள்விவகார மந்திரி, வர்த்தக மந்திரி ஆகியோரைக்கொண்ட மந்திரிசபை உபகமிட்டி இது பற்றித் தீர்மானிப்பதற்கு அடுத்த புதன்கிழமை கூடும்.

உத்தியோகபூர்வமான கமிட்டியில் ஸ்தலஸ்தாபன சேவை கமிஷனர் திரு. டபிள்யு. டி. வி. மகாதந்தில (தலைவர்), அரசாங்க பொதுச்சேவை கமிஷனின் காரியதரிசி திரு. சி. ஜே. சேரசிங்கா, தேசியதிட்ட அமைப்பு இலாகாவைச் சேர்ந்த திரு. சி. சூரியகுமாரன் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்.

## மேகநோய் அதிகரிப்பு

கொழும்பு, வெள்ளி

மேகநோய் இலங்கையில் அதிகரித்து வருவதால் இதனைத் தடுக்க சுகாதார சேவை இலாகா தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1962-ம் வருடத்தில் 2,336 பேருக்கு இந்நோய் பரவியிருந்ததாகக் காணப்பட்டது.

## அராலிகிழக்கு,...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் 1-ம் எதிரி டோர்ச்லைட் வைத்திருந்தார் என்றீரா?— ஞாபகமில்லை.

நீதி: அப்படி கூறியிருக்கிறீர்? -(மௌனம்)

வழ: பொலிஸ வாக்குமூலத்தில் 1-ம் எதிரியுடன் நின்றவரைத் தெரியும் என்றீரா? —நான் அப்படிச் சொல்லவில்லை.

வழ: சதாசிவத்தையும், நாகேசுவையும் கண்டதாக பொலிஸாருக்கு கூறினீரா?- அப்படிச் சொன்னதாக ஞாபகமில்லை.

நீதி: நாகேசுவையும் கண்டதாக பொலிஸாருக்கு கூறியிருந்தால் அது பொய் தானே?- ஆம்.

நீதி: என்ன விழிக்கிறீர், பதில் சொல்லும்.

வழ: விளக்கு வெளிச்சத்தில் நாகேசுவை அடையாளம் கண்டதாக பொலிஸாருக்கு சொன்னீரா?-நான்சொல்லவில்லை.

நீதி: அப்படிச் சொல்லியிருந்தால் அது பொய் தானே?- ஆம்.

வழ: கீழ்க்கோர்ட்டில் நான் நித்திரை செய்துகொண்டிருக்கும் போது சடுதியாக வெடிச்சத்தம் கேட்டது என்றீரா?- ஞாபகமில்லை.

நீதி: அப்பொழுது சொன்னது உண்மை தானே. கீழ்கோர்ட்டு நீதவானுக்கு பொய் சொன்னீரா? - உண்மைதான் சொன்னேன்.

நீதி: யாரோ உமக்கு சுட்டு விட்டார்கள் அதைப்பற்றி அநுதாபப்படுகிறேன். ஆனால் நீர் ஆளைக் காணவில்லை? - கண்டேன்.

நீதி:கண்ணுத்துரை உமக்கு வாசித்து காட்டவில்லையா?- இல்லை.

சரியாக 11 மணிக்கு நீதியரசர் ஜூரிகளைப்பார்த்து இவ்வழக்கு விசாரணையை தொடர விரும்புகிறீர்களா? என்று கேட்டுவிட்டு, வழக்கறிஞர்கள் பக்கம் திரும்பி வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கத்திடம் குறுக்கு விசாரணை செய்யும்படி கூறினார்.

2-வது எதிரியின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் குறுக்குவிசாரணை செய்தார்.

வழ: எப்பொழுது டோர்ச் அடித்தார்கள்?- டோர்ச் அடிக்குமுன் சூடு விழுந்தது.

நீதி: உண்மை பேசியது ஞாபகமில்லையா?- (மௌனம்)

வழ: சூடு விழுமுன் டோர்ச் அணைக்கப்பட்டதாக கீழ்க்கோர்ட்டில் கூறினீரா?- ஞாபகமில்லை.

வழ: சம்பவம் நடந்த தினம் அமாவாசை வந்து ஆருவது நாள்?- ஆம்.

### சாட்சியம் திருப்தியளிக்கவில்லை

நீதியரசர் ஜூரிகளை பார்த்து வழக்கைத் தொடர விரும்புகிறீர்களா? என்று கேட்டார். அப்பொழுது ஜூரிகள் தலைவர் எழுந்து, இந்த சாட்சியம் திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்தார். முடிக்குரிய வழக்கறிஞர் எழுந்து வேறு சாட்சிகளை அழைப்பதில் இனி பயனில்லையென்று நீதியரசரிடம் தெரிவித்தார்.

### மூன்று மாதம் அனுப்பியிருப்பேன்

"உம்மை மூன்று மாதம் சிறைக்கு அனுப்பியிருப்பேன். உமது காலில் காயமிருப்பதால் அப்படிச் செய்யவில்லை. நீர் போகலாம்" என்று நீதியரசர் சாட்சியைப் பார்த்துக் கூறியதும் சாட்சி எழுந்து நொண்டியபடி நீதிமன்றத்தைவிட்டுச் சென்றார்.

5-ந் திகதி திங்கட்கிழமை காலை9-15 மணிக்கு நீதிமன்றம் மீண்டும் கூடும்பொழுது அடுத்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## புராதன ஆலய புனருத்தாரணம்

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி பெருமாக்கடவைப் பகுதியில் மாருதப் புரவீகவல்லியினால் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் ஒன்றான ஏரம்பன் திருக்கோயிலை புனருத்தாரணம் செய்யும் வகையில் ஆலோசனைச்சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில காலமாக பஜனை முதலிய கைங்கரியங்களில் ஈடுபட்டுவந்த தொண்டர் சபை கோயில்களில் பல விழாக்களையும் நடத்தும் அடியார்களை அழைத்து கடந்த வாரத்தில் ஆலய மண்டபத்தில் ஒரு கூட்டத்தை ஒழுங்குசெய்தது. தொண்டர் சபை போஷகர் திரு. சீ. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விஸ்வநாதன், திரு. தா. பொன்னம்பலம் உட்பட பலர் சமுகமளித்திருந்தனர். கூட்ட இறுதியில் 9 பேரைக்கொண்ட ஆலோசனைச்சபையொன்று நியமிக்கப்பட்டது.

32 ஆண்டுகளாக நடைபெற்றுவராத கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகநடத்த வேண்டுமென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## டாக்டர் நிக்ரூமா வெற்றி

ஆகரா, அ. 2

கென்யா பிரதமர் டாக்டர் நிக்ரூமா மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேரணை தோல்வியடைந்தது. முன்பு வாக்களித்ததுபோல் ஆகஸ்ட் 15-ம் திகதிக்கு முன் கிழக்காபிரிக்கசம்மேளனத்தை நிறுவ டாக்டர் நிக்ரூமா தவறிவிட்டார் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. விவாதத்தில் பேசின கென்யா உள்நாட்டு மந்திரி, டாக்டர் நிக்ரூமா நம்பிக்கையுள்ள சக்திவாய்ந்த தலைவர் என வருணித்தார்.

## "ஐக்கியம் குலையவில்லை"

கொழும்பு, வெள்ளி

'சுதந்திரக் கட்சியின் பிற்போக்குவாதிகள் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஒரு பகுதியை, கூட்டரசாங்கம் அமைப்பதற்காக தம்முடன் சேர்த்துக்கொண்டதால் இடதுசாரிகளின் ஐக்கியம் குலைந்துவிடவில்லை என கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா முதலாவது அகிலத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கெய்ரோ மகாநாடு..

(1-ம் பக்கத்தத் தொடர்ச்சி

வித்துள்ளனர் உள்நாட்டில் ஆச்சார்யா வினோபாஜி, டாக்டர் ராதாகிருஷ்ணன், மந்திரிகள், சபாநாயகர், ராஜ்யஉபசபாநாயகர், ராஜ்ய கவர்னர்கள், முதன்மந்திரிகள் ஆகியோர் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

கெய்ரோ மகாநாட்டுக்குச் செல்லும் வழியில் நேபாள மன்னர் மகேந்திரா இன்று டில்லி வந்தார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

மாணவ மாணவிகளும் பூரண பயன் பெறக்கூடும்.

* * *

அஞ்சப் புலனி வற்றுலாட்ட வாட்டுண்ட ருகோய்க்கிடமாய வுடலின் தன்மை, தஞ்சமெனக் கருதித் தாழேல் நெஞ்சே தாழக் கருதியே தன்னைச் சேரா, வஞ்ச மனத்தவர்கள் காணவொண்ணு மணிகண்டன் வானவர் தம் பிரானென்றேத் தும், நெஞ்சர்க் கினியவன் நெய்த்தான மென்று நினையுமாநினைந்தக்கா லுய்யலாமே.

—திருநாவுக்கரச சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

பிரதமரின் புதல்வி சுனித்ரா நல்ல அதிர்ஷ்டக்காரி. தமது தந்தை படித்த ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் சேர்ந்து படிக்க அவருக்கு இடம் கிடைத்துள்ளதுடன், அவருக்காகும் எல்லாச் செலவுகளையும் அந்த சர்வகலாசாலையே ஒப்புக்கொண்டுவிட்டதாம்.

இங்கிருந்து சீமைக்குச் செல்ல விமான டிக்கெட்டையும் லண்டனிலே, பிரிட்டிஷ் பிரஜையாகியுள்ள அவரது உறவினர் யாரோ வாங்கி அனுப்பியதாயும், இலங்கைக்கு எவ்வித செலாவணி நஷ்டமும் இல்லையாகையால் அவர் செல்ல வெளிநாட்டு இலாகா அனுமதித்துவிட்டதாயும், அவரது தாயாரான பிரதம மந்திரி ஒரு நீண்ட அறிக்கை வெளியிட்டுள்ளார். செல்வி சுனித்ராவுக்கு நமது பாராட்டுகளும் நல்வாழ்த்துக்களும்.

ஆனால் அவருக்குக் கிடைத்த இந்த அதிர்ஷ்டம், இலங்கையிலுள்ள எவ்வளவு பெண்களுக்குக் கிடைக்க முடியும்? எல்லாரும் பிரதம மந்திரியின் புதல்விகளா? எல்லாருக்கும் லண்டனில் உறவினர்கள் இருக்க முடியுமா? அவர் ஒரு பிரதமரின் புதல்வியாக இருந்திராவிடில், அவருக்கு ஆக்ஸ்போர்ட்டிலே இந்தச் சலுகை கிடைத்திருக்குமா? அவருக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பு தங்களுக்கும் கிடைக்க முடியுமா? என்று நமது பெண்கள் மனதில் பலபல கேள்விகளும் எழக்கூடும். பக்கத்திலுள்ள சென்னைக்கும் போய்ப் படிக்கமுடியாமல் பல மாணவ மாணவிகள் தவிக்கின்றார்கள். அவர்களுக்கும் இனி நல்ல காலம் பிறக்கவேண்டும்.

சுனித்ராவின் தாய்மட்டுமன்றி தந்தையும் இந்நாட்டின் பிரதமராக இருந்தவர். இப்பேர்ப்பட்ட வாய்ப்பு உலகில் யாருக்கு உண்டு? ஆக்ஸ்போர்ட்டிலே, அவர் அரசியல் சாஸ்திரம் படிக்கப்போகிறாராம். இலங்கையின் அரசியலில் கலந்துகொண்டு, அவரும் எதிர்காலத்தில் ஒரு பிரதமராக வருவதக்கு இது பயிற்சி போலும்!

* * *

அவரது தங்கை கொழும்பிலுள்ள 'அக்விளுஸ்' கல்வி ஸதாபனத்தில் படிக்கின்றாராம். அந்த மேலான கல்வி ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தியவர் காலஞ்சென்ற வணபிதா. பீட்டர்பிள்ளையவர்களாவர். அது ஒரு கத்தோலிக்க கல்வி ஸ்தாபனம்.

பௌத்தரான பிரதமர் ஸ்ரீமா கல்விபயின்றதும் ஒருகத்தோலிக்க பெண்கள் கல்லூரியில்தான் தமது இளம் புதல்வியையும் அவர் அவ்வித கல்விஸ்தாபனத்திலேயே சேர்த்திருக்கின்றார்.

மற்றும் எவ்வளவோ பௌத்த கல்லூரிகள் இருக்கையில், தமது புதல்வியைப் பிரதமர் இந்தக் கத்தோலிக்க கல்லூரியில் சேர்த்ததற்குத் தக்க காரணம் இருக்கத்தான்வேண்டும்.

ஒரு சைவ அன்பர், தமது புதல்வர்களை, சைவக் கல்லூரியிலிருந்து, ஒரு கிறிஸ்தவக் கல்லூரிக்கு மாற்றிவிட்டார். ஏன் என்று கேட்டதற்கு, கிறிஸ்தவக் கல்லூரியில் அதிக கட்டுப்பாடும் ஒழுக்கமும் இருப்பதாகச் சொன்னார்.

இங்கு சில சைவக் கல்லூரிகள்மேலான முறையில் நடந்து வருகின்றனதாம். என்றாலும் பெயரளவில் மட்டுமல்லாமல் உண்மையான சைவச்சீலர்களாக சைவக் கல்லூரி நிர்வாகிகளும் ஆசிரியர்களும் இருப்பின் அங்கு படிக்கும்

(4-ம் கலம் பார்க்க)

# ஐ. அ. குடியரசுக்கு இந்திய பிரதமர் ராஜாங்க விஜயம்

## திரும்பும் வழியில் பாக். அதிபர் அயூப்கானை சந்திக்கிறார்

புதுடில்லி, அக். 2

இந்தியப் பிரதமர் சாஸ்திரி ஐக்கிய அராபியக் குடியரசில் 3 நாள் ராஜாங்க விஜயத்தை மேற்கொள்ளவும், மண்டலசார்பற்ற தலைவர்களின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டும் இன்று கெய்ரோ புறப்பட்டார். நேபாளத்தைத் தவிர வெளிநாடு ஒன்றுக்கு சாஸ்திரி செல்வது இதுவே முதல்தடவை.

இன்றுமாலை கெய்ரோவுக்கு அவர் வந்து சேர்ந்தவுடன் ஜனாதிபதி நாஸர் அவரை விமானநிலையத்தில் வரவேற்பார். இன்றிரவு நாஸர் அவருக்கு ராஜாங்க விருந்தொன்று அளிக்கிறார். வருகிற 11-ம் திகதி அவர் தாயகம் புறப்படுவார். தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு அவர் பாரதப்படை விமானமொன்றில் பிரயாணம் செய்வார். திரும்பும் வழியில் 12 ம் திகதி எண்ணெய் நிரப்புவதற்காக விமானம் கராச்சியில் இறங்கும். அச்சமயம் தம்முடன் பகல் உணவு அருந்தவருமாறு திரு. சாஸ்திரியை பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான் அழைத்திருக்கிறார் என்றும் பிரதமர் இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருப்பதாயும் புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது.

திரு. சாஸ்திரி ஜனாதிபதி நாஸருடன் நாளை பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார் என்றும் நாளை மறுதினம் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டியளிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

கெய்ரோவில் முடிந்த அளவு அதிக தலைவர்களைத் தாம் சந்திக்கப் போவதாய் திரு. சாஸ்திரி கூறினார். திரு. அயூபுடன் தாம் பயனுள்ள பேச்சு நடத்தும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளப் போவதாயும் சாஸ்திரி கூறினார்.

சாஸ்திரியும் அயூபும் வருகிற 12-ம் திகதி பூர்வாங்கமாக உபயோகமான பேச்சு நடத்துவார்கள் என பாகிஸ்தான வெளிநாட்டு மந்திரி பூட்டோ கூறினார்.

---

ஒலிம்பிக்

## இந்தோனேஷியா பயமுறுத்தல்

டோக்கியோ, அக் 2

இந்தோனேஷியநீச்சல் வீரர்கள் ஒலிம்பிக்கில் பங்குபற்ற அனுமதிக்கப்படாவிட்டால், தமது ஒலிம்பிக் கோஷ்டி முழுவதையும் வாபஸ் பெற்றுவிடுவதாய் அந்நாட்டு விளையாட்டுத்துறை மந்திரி இங்கு பயமுறுத்தல் விடுத்தார். இந்த நீச்சல் வீரர்கள் சர்வதேச ஒலிம்பிக்கினால் அங்கீகரிக்கப்படாத விளையாட்டு ஸ்தாபனத்தின் சார்பாக நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டதே இதற்குக்காரணம்.

---

உபதேர்தல்

## வெலன்ஸ்கி தோல்வியடைந்தார்

ஸலிஸ்பரி, அக். 2

ரொடீஷியா-நயாஸாலாந்து சம்மேளனத்தின் முன்னாள் பிரதமரான திரு. ராய் வெலன்ஸ்கி இங்கு நடைபெற்ற உபதேர்தல் ஒன்றில் தோல்வியுற்றார். அவருடன் போட்டியிட்ட தென் ரொடீஷிய உதவிப் பிரதமர் குறித்த தொகுதியில் வெற்றி பெற்றார் மற்றோர் உபதேர்தலிலும் அரசாங்கக்கட்சி அபேட்சகர் வெற்றிபெற்றார்.

---

## ஈக்வடோரில் ராணுவப் புரட்சி

பனமா, அக். 2

ஈக்வடோர் நாட்டில் ராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. ஜனாதிபதியும், மற்றும் பல மந்திரிகளும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். ரேடியோநிலையங்கள், பாடசாலைகள் முதலியன மூடப்பட்டன.

---

## சிலியில் டிகால்

சந்தியாகோ, அக். 2

லத்தின் அமெரிக்காவில் சுற்றிவரும் பிரெஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டிகால் நேற்று சிலி நாட்டுத் தலைநகர் வந்துசேர்ந்தார்.

---

## 15 பேர் கைது

டப்ளின், அக். 2

வட அயர்லாந்தில் தடை செய்யப்பட்ட குடியசுக்கட்சியினருக்கும், பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் பல பொலிசார்கள் காயமடைந்தனர். 15 பேர் கைது செய்யப்பட்டனர்.

---

## ஸ்ரீமதி பண்டிட்

பம்பாய், அக் 2

மகாராஷ்டிர மது விலக்கு மந்திரியை, கவர்னர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் நேற்று பதவி நீக்கம் செய்தார்.

---

## டாக்டர் ஹுஸெய்ன்

ராஜ்கார்ட், அக். 2

உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் சௌராஷ்டிராவில் 5 நாள் சுற்றுப்பிரயாணத்திற்காக வந்திருக்கிறார். காந்தி பிறந்த புனிதபூமியில் சுற்றுப்பிரயாணம் செய்ய வந்திருப்பதாய் அவர் கூறினார்.

---

## 250 மீனவர் திரும்பினர்

ஹைதராபாத், அக். 2

ஆந்திரபிரதேச கடற்கரையிலிருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 450 மீனவர்களில் 250 பேர் திரும்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இவர்களில் 120 பேர் நீந்திக் கரை வந்தனராம்.

---

# அரசியல் சாஸனம் திருத்தப்படலாம்

## சுப்ரீம் கோர்ட் கருத்தின் விளைவு

புதுடில்லி, அக் 2

சட்ட சபையின் அதிகாரம், உரிமை ஆகியனபற்றி சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ள கருத்தைத் தொடர்ந்து அரசியல் சாஸனத்தைத் திருத்தவேண்டுமா என்பதைப்பற்றி பார்லிமெண்டும், அரசாங்கமும்தான் தீர்மானிக்க வேண்டும் என லோகசபை சபாநாயகர் திரு ஹூக்கும்சிங் கூறினார்.

பிரதம மந்திரி திரு. சாஸ்திரி அச்சமயம் எழுந்து இது ஒரு முக்கிய தீர்ப்பு என்றும், அவசரப்பட்டு முடிவுக்கு வரக்கூடாது என்றும், ராஜ்யங்களுக்கும் இவ்வாறே தெரிவிக்கப்படு என்றும் கூறினார்.

இதற்கிடையில் சுப்ரீம் கோர்ட் கருத்தின் விளைவுகளைப்பற்றி ஆராய உத்தர பிரதேச சட்டசபை 15 அங்கத்தினர்களைக் கொண்ட கமிட்டியை அமைத்திருக்கிறது.

தாம் இவ்விஷயம்பற்றி இதர ராஜ்யங்களின் சபாநாயகர்களுடனும், லோகசபை சபாநாயகர்களுடனும் தொடர்பு கொண்டிருப்பதாக உ. பி. சபாநாயகர் அறிவித்தார்.

---

# இந்தியாவில் காந்தி ஜயந்தி கொண்டாட்டங்கள்

புதுடில்லி, அக். 2

மகாத்மா காந்தியின் பிறந்த தினம் இன்று நாடெங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் காந்தி ஜயந்தி தேசிய துப்புரவு தினமாக அனுஷ்டிக்கப்படும். ராஜ்காட்டில் இன்று காலை நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்; ஜனாதிபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் சாஸ்திரி ஆகியோரும் இதில் கலந்து கொண்டு சமாதியில் மலர்வளையம் வைத்தனர்.

அரசாங்கத்தின் தகவல், ஒலிபரப்புப் பிரிவு காந்தி நூல்களின் 12ம் தொகுதியை இன்று வெளியிடுகிறது. காந்திஜி தென்னாபிரிக்காவில் மேற்கொண்ட நடவடிக்கையின் சடைசித்தொகுதி இது. காந்தி ஜயந்தியை முன்னிட்டு ஜயப்பூரில் விவசாயப் பல்கலைக்கழகம் ஒன்றை ஸ்ரீமதி இந்திரா காந்தி திறந்துவைக்கிறார். இதற்கு நேருவின் பெயரிடப்படும்.

நாடெங்கும் பல பிரார்த்தனைகளும், கூட்டங்களும் நடைபெறுகின்றன.

---

## "நேட்டோ ஐரோப்பாவுக்கு மட்டுமல்ல"

—ஜோன்ஸன்

பால்டிமோர், அக். 2

கிழக்கு, மேற்கு நாடுகளுக்கிடையே மேலும் நெருக்கமான சமரச உடன்பாடு ஏற்படவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் கூறினார். கிழக்கு ஐரோப்பிய மக்கள் மேற்கு நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பளிப்பதன்மூலமே இதைச் சாதிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

நேட்டோ ஸ்தாபனம், ஐரோப்பாவில் மட்டுமன்றி உலகின் வேறு பகுதியிலும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் என்றும் அவர் கூறினார்.

---

## சுகர்ணோவுக்கு அதிக ரஷ்ய ஆயுதம்

மாஸ்கோ, அக். 2

இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்ணோ மாஸ்கோவில் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், இந்தோனேஷியாவின் முப்படைகளுக்கும் அதிக ஆயுதங்களை வழங்க சோவியத் யூனியன் இணங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

---

கெய்ரோ

# உச்சி மகாநாட்டுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு முடிந்தது

## மலேஷியா பிரச்னையை கிளப்பாமல் இருக்க சுபந்திரியோ இணக்கம்

கெய்ரோ, அக். 2

மண்டலசார்பற்ற வெளிநாட்டு மந்திரிகள் நேற்று உச்சிமகாநாட்டில் விவாதிப்பதற்கான நிகழ்ச்சிநிரல்களைத் தயாரித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

பொதுவான சர்வதேச நிலைமை, உடனிருந்து வாழ்தல், இனஒதுக்கல், ஆயுதப் பரிகரணம், பொருளாதார விஷயங்கள் ஆகியன அவற்றில் சிலவாகும்.

வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்கு ஐக்கிய அராபியக் குடியரசின் வெளிநாட்டுமந்திரி தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவரது பெயரை இந்திய வெளிநாட்டுமந்திரி சுவர்ண்சிங் பிரேரித்தார்.

திரு. சுவர்ண்சிங் நேற்று தொடர்ந்து இதரசகாக்களுடன் ஆலோசனை நடத்தினர். நேபாளம், பர்மா நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகளுடனும் இலங்கைமந்திரி திரு. பீலிக்ஸுடனும் அவர் பேசினார். இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரியுடன் அவர் பேசியதன் விளைவாக மகாநாட்டில் மலேஷியப் பிரச்னையைத் தாமாகக் கொண்டுவராமலிருக்க அவர் இணங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

மகாநாட்டில் விவாதிக்க வேண்டிய விஷயங்கள் குறித்து மகாநாட்டில் அநேகமாக ஒற்றுமை நிலவுவதாகக் கூறப்படுகிறது.

---

# "போருக்காக இந்தியா ஆயுதங்களை பெருக்குகிறது"

## பாகிஸ்தான் அதிபர் கண்டனம்

ராவல்பிண்டி, அக். 2

இந்தியாவுக்கு மேற்குலகு ஆயுதசடலை நடைபெறுவது பாகிஸ்தானின் பந்தோபஸ்துக்கு பேரபாயம் விளைவித்து வருவதாய் ஜனாதிபதி அயூப்கான் இங்கு கூறினார்.

பாகிஸ்தான் சீனாவுடன் நட்புறவு கொண்டிருக்கிறதென்றும் ரஷ்யாவுடனும் நட்புறவு கொள்ளும் எனறும் அவர் மேலும் தெரிவித்தார்.

சீனா இந்திய மீது பெருமளவில் தாக்குதல் நடத்த முடியாது என்றும் எனவே மேற்கு நாடுகள் இந்தியாவுக்கு ஆயுத சடலை செய்வதில் அர்த்தமில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

"இந்தியாவுக்கு இப்போது அதிகம் தேவைப்படுவது பொருளாதார உதவியே. ஆனால் ஆயுதஉதவிமூலம் இந்தியா யுத்தத்துக்கு தயார் செய்துவருகிறது. காஷ்மீர் எல்லையில் பல சம்பவங்களை அது சிருஷ்டித்து வருகிறது. இந்திய முஸ்லீம்கள் அங்கிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்" என்றும் அயூப் கூறினார்.

"இந்தியா பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரிகள் சந்தித்து இப்பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண முயல்வார்கள் என நம்புகிறேன்" என்றும் அவர் கூறினார்.

வெளிநாட்டுமந்திரி பூட்டோ ஒருகூட்டத்தில் பேசுகையில் வருகிற ஜனாதிபதி தேர்தல் கொள்கை அடிப்படையில்தான் இருக்குமென்றும்பாகிஸ்தானில் எதிர்க்கட்சி அபேட்சகர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்க அனுமதிக்கப்பட்டிருப்பதிலிருந்தே அங்கு ஜனநாயகம் இருக்கிறதென்பது நிரூபிக்கப்படுகிறதென்றும் கூறினார்.

---

## வெள்ளச் சேதம் ரூ. 40 கோடி

புதுடில்லி, அக். 2

வெள்ளத்தின் விளைவாக இவ்வாண்டில் ரூ 40 கோடிக்கு சேதமேற்பட்டுள்ளதாக ராஜ்யங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிராமங்கள் 18,000 விளைபயிர்களுடன் கூடிய 30 லட்சம் ஏக்கர் நிலங்களும் இதில் பாதிக்கப்பட்டன.

---

## ஹாக்கி கோஷ்டி

டோக்கியோ, அக். 2

இந்திய ஒலிம்பிக் ஹாக்கி கோஷ்டி நேற்று டோக்கியோ வந்து சேர்ந்தது.

பாகிஸ்தான் தன் உலக சாம்பியன்பட்டத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் என நம்புவதாக பாகிஸ்தான் ஹாக்கி கோஷ்டி காப்டன் ஒலிம்பிக் செல்லும் வழியில் கூறினார்.

---

## நேரு பற்றி முழுநீள சினிமா

புதுடில்லி, அக். 2

ஜவஹர்லால் நேருபற்றி முழுநீள சினிமாப்படம் ஒன்றை எடுக்கத் திட்டமிடப்பட்டுவருவதாக தகவல் ஒலிபரப்பு மந்திரி ஸ்ரீமதி இந்திராகாந்தி பார்லிமெண்டரி ஆலோசனைக் கமிட்டியில் கூறினார். இந்தப் பணியை மேற்கொள்ளுமாறு ஒரு பிரபல இந்தியப் படாதிபதியை ஏற்கனவே கேட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

---

## சாஸ்திரிக்கு 60 வயது

புதுடில்லி, அக். 2

காந்தி ஜயந்தி தினமான இன்று இந்தியப் பிரதமர் சாஸ்திரியின் 60-வது பிறந்த தினமுமாகும். தலைவர்களும் முப்படைத் தலைவர்களும் அவருக்கு பிறந்தின வாழ்த்துக்களை அனுப்பியிருக்கிறார்கள். கிழக்கு ஜெர்மன் பிரதமர், சாஸ்திரி தீர்க்காயுளுடன் வாழவேண்டுமெனக் கூறியிருக்கிறார்.

---

4-ம் திட்டம்

## தமிழ்நாட்டுக்கு ரூ. 500 கோடி

சென்னை, அக். 2

தமிழ்நாட்டில் நாலாவது திட்ட முதலீடு ரூ. 450 கோடிக்கும், 500 கோடிக்கும் இடைப்பட்டதாக இருக்கும் என விஷயமறிந்த வட்டாரங்களிலிருந்து தெரிகிறது. மின்சார அபிவிருத்திக்கு மட்டும் ரூ. 200 கோடி செலவாகும் என அந்த வட்டாரங்கள் கூறின.

---

## சந்தேகநபர் பிடிபட்டார்

மாவிட்டபுரம், வெள்ளி

மாத்தறையில் 1184 ரூபாய் பெறுமதியான நகைகளையும் ரொக்கத்தையும் நம்பிக்கை மோசடி செய்தது சம்பந்தமாக கொழும்பு சி. ஐ. டி. பொலிசாரால் தேடப்பட்டு வந்த கண்டியைச் சேர்ந்த பல தரப்பட்ட குற்றவாளியான புஞ்சி அப்புஹாமி என்பவரை காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. முருகேசு சிமெந்தித் தொழிற்சாலையில் புதிய உபபொலிஸ் ஸ்டேஷனில் வைத்துக் கைது செய்தார். இவர் கொழும்பு சி. ஐ. டி. பொலிசாரிடம் பாரம் கொடுக்கப்பட்டுள்ளார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 3-10-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 சேர்ந்திசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 ஞானம் சந்தானம் — பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'ஷேக்ஸ்பியரின் ஆரம்ப நாடகங்கள்' — பேச்சு — மகேஸ்வரி தம்பிப்பிள்ளை, 9-30 ஆர். பொன்ராஜா — வயலின், 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 4-10-64**

காலை 6-45 பாமாலை, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 சேர்ந்திசை, 7 45 மெல்லிசை, 8-00 பௌத்தபோதனை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வி. ஜெயவீரசிங்கம் — பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 7-00 வி. என். பாலசுப்பிரமணியம் — பாட்டு, 7-30 'சீதனமும் காதலும்' — நாடகம் — எழுதியவர்: உடப்பு வேலாயுதம், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மாதர்விருப்பம், 9-45 சேர்ந்திசை, 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

### திருச்சி

**சனி 3-10-64**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 ஸ்ரீ வெங்கடேஸ்வர ஸுப்ரபாதம்.

பகல் 1-00 பிள்ளைக்கனி அமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 வேதவல்லி ராமசாமி — வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்திய இசை

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 நல்வாழ்வு — நாடகம் — வாசவன் எழுதியது, 8-00 வேதவல்லி ராமசாமி — வயலின், 8-40 மெல்லிசை, 9-15 இசைக்கோவை, 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி — சம்பிரதாய பக்திபாடல்கள்.

**ஞாயிறு 4-10-64**

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பிரான்மலை எஸ். வைத்தியநாதன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூர்யகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர் 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 டி. கே. ஜயராமஐயர் — வயலின்.

மாலை 5-15 பிரான்மலை எஸ். வைத்தியநாதன் — பாட்டு.

இரவு 6-15 செய்திக்குறிப்புகள், 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 மனிதகுலத்தின் மாண்பு, 7-45 வனமெனும் ஆலயம் — சித்திரம், 8-00 கே. சி. தியாகராஜன், எச் எஸ். மதலாச்சார் — இரு கோட்டுவாத்திய இசை, 9-30 மெல்லிசை, 9-45 தகவல்வேள்வி — சங்கீத உபந்யாசம் — நிகழ்த்துபவர் எம் பசர் விஜயராகவாச்சாரியார்.

## தமிழ் மன்றத்திற்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ் அன்னையின் சேவையில் ஈடுபட்டு உழைக்கும் மாணவ மன்றத்தினருக்கு எல்லோரும் உதவி செய்து அம்மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்ற ஆவன செய்தல் வேண்டும்" என்று இலங்கை சர்வகலாசாலை தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டரில் நடைபெற்ற உபகாரக் காட்சிக்குத் தலைமை தாங்கிய யாழ் மாநகரசபை அங்கத்தவர் திரு எஸ் நாகராசா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

இன்று ஈழத்தில் எத்தனையோ மன்றங்கள் செயலில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அறிவும், ஆற்றலும் அப்பழுக்கற்ற பொதுநல உணர்ச்சியும் தமிழ் மொழிப் பற்றும் நிரம்பிய செந்தமிழ் செல்வர்களை நடத்தும் தமிழ் மன்றம், எமது நாட்டில் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதில் முதலிடம் வகிப்பதைக் காண பெருமைப்படுகிறேன்.

## 59 போத்தல் சாராயம் பறிமுதல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

நெல்லியடியைச் சேர்ந்த ஒரு கார் வல்வெட்டித்துறையிலிருந்து உடுப்பிட்டியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில் வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜண்ட் எம் பி வேலு சந்தேகத்தின் மீது காரைப்பின் தொடர்ந்து சென்று அக்காரை நிறுத்தும்படி அடையாளம் கொடுத்தார். சாரதி தொடர்ந்தும் ஓடிக்கொண்டேயிருந்தார். சார்ஜண்ட் முந்திச் சென்று காரைச் சோதனையிட்டபோது காரில் 59 போத்தல் சாராயம் இருக்கக்காணப்பட்டது. சந்தேக நபர்களான நெல்லியடியைச் சேர்ந்த முருகேசு இளையதம்பி, கந்தர் கதிரவேலு ஆகியோர் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.

## பத்திரிகை கட்டுப்பாடு
### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் கண்டனம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் செயற்குழு அண்மையில் கூடி பின்வரும் தீர்மானத்தை இயற்றியுள்ளது.

"ஜனநாயகத்தின் அச்சாணியாக நாகரிக நாடுகளால் கருதப்பட்டும் கணிக்கப்பட்டும் வரும் பத்திரிகைச் சுதந்திரத்தை எந்த முறையிலோ அல்லது வகையிலோ கட்டுப்படுத்தி அதன் மூலம் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப்போட்டு அவற்றை ஆளும் கட்சியின் ஊதுகுழலாக மாற்றி, சர்வாதிகார ஆட்சிக்கு அடிகல் நாட்ட முயற்சிக்கும் இலங்கை அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கை இச்சங்கம் மிக வன்மையாகக் கண்டிப்பதோடு, சட்டமூலம் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி பத்திரிகைகளை பத்திரிகைக் குழு மூலம் எடுக்கவோ வேறு எந்த விதமாக கட்டுப் படுத்தவோ இருக்கும் முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறது"

## இரவில் கல்வீச்சு; பகலில் அடிதடி

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் தெற்கு ஆரியந்துறை என்னுமிடத்தில் முதல் நாளிரவு நடைபெற்ற பயங்கரக் கல்வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து பகலில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட வாதம் பெரும் கைகலப்பாக மாறியது. இக்கைகலப்பில் சிவக்கொழுந்து என்பவர் பலமாகத் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. வேலாக்குட்டி, தியாகராசா ஆகியோரும் தாக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இக்கைகலப்புக்குக் காரணம் சமீபகாலமாக முத்தன் தம்பன் என்பவர் வீட்டிற்கு இரவில் கல்வீச்சு நடைபெற்று வந்ததேயாகும். இக்கல்வீச்சு பேயின் சேஷ்டை என முன்பு கூறப்பட்டது. பருத்தித்துறைப் பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணை செய்கின்றனர்.



கரபந்தாட்டம்:

# "வடக்கிலும் பார்க்க கிழக்கின் தரம் உயர்வாக இருக்கிறது"

— நீதிபதி அப்துல்காதர்

யாழ்ப்பாணம், சனி

"கரபந்தாட்டத் துறையில், வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஒப்பிடும் பொழுது கிழக்கு மாகாணத்தின் தரம் உயர்வாகக் காணப்படுகின்றது. தங்களின தரத்தை உயர்த்திக்கொள்ளும் பொருட்டு, வடக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு சங்கமும் இப்படியான கரபந்தாட்ட சுற்றுப்போட்டிகளை நடத்தவேண்டும்" என்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழக பரிசளிப்பு விழாவில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. என், எம். அப்துல் காதர் பேசுகையில் கூறினர்.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் கல்லோயா விளையாட்டுக் கழகத்திற்கு மிடையே நடைபெற்ற கரபந்தாட்ட போட்டியைத் தொடர்ந்து இப்பரிசளிப்புவிழா ஆரம்பமானது, இந்தப் போட்டியில் கல்லோயா வெற்றியீட்டியது.

'ஈழநாடு' வெற்றிக் கிண்ணம் குப்பிழான் விக்னேஸ்வர விளையாட்டுக் கழகத்துக்கு கிடைத்திருந்தது. தையிட்டி ஸ்ராஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்தைப் பெற்றிருந்தது.

பல பிரிவுகளிலும் வெற்றி பெற்ற கழகத்தினருக்கு நீதிபதி அபதுல்காதர் பரிசுகள் அளித்தார்.

## கைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

### இம்மாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன்துறை அபிவிருத்தி விளையாட்டு கழகத்தின் கைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி இம்மாதம் ஆரம்பமாகிறது. இப்போட்டிக்கான சேர்வுப் பத்திரம் இம்மாதம் 12-ம் திகதி முடிவடைகிறது.

'ஏ' பிரிவில் முதலாவதாக வெற்றி பெறுபவர்களுக்கு கேடயமும், இரண்டாவதாக வெற்றியடைபவருக்கு வெள்ளிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும். முதலாவதாக வெற்றி பெறும் கோஷ்டியிலுள்ளவர்களுக்கு தனிதனி கிண்ணமும் வழங்கப்படும்.

'பி' பிரிவில் முதலாம், இரண்டாம் பரிசு பெறுபவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படும்.


"நாங்கள் கிறேசன்ஸ்

வேப்பர் கிறீம்

உபயோகிக்கத் தொடங்கியதிலிருந்து, எனது பிள்ளைகள் தடிமன் காரணமாக ஒரு நாளாவது பாடசாலைக்குப் போகத்தவறியதில்லை"

—திருமதி ஏ. எச்




உங்கள் குழந்தையின் நன்மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீமையே கேட்டுவாங்குங்கள்.

எல்லா மருந்துக் கடைகளிலும், பலசரக்குக் கடைகளிலும் கிடைக்கும்.


சனசமூகநிலையங்கள்

## "சகல துறைகளிலும் பாடுபடவேண்டும்"

யாழ்ப்பாணம், சனி

இணுவில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சனசமூக நிலையத்தின் எட்டாவது ஆண்டுவிழா நிலையத் தலைவர் திரு. கா. சிவக்கொழுந்து தலைமையில் நடைபெற்றது.

நூல்நிலையத்தை திரு. ச. முத்துலிங்கம் திறந்துவைத்தார். பலரின் சொற்பொழிவுகளுடன் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

விழாவையொட்டி நடைபெற்ற ஐந்து மைல் மரதன் ஓட்டப்போட்டியில் முதலாவது இடத்தை மு. பரமலிங்கமும் 2-வது இடத்தை சி. தேவராசாவும் 3-வது கு. சண்முகலிங்கமும் எடுத்தன. வெற்றி பெற்றவர்களுக்கு திரு. வை. ச. சண்முகம் பரிசுகள் வழங்கினர்.

போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர், நிலையச் செயலாளர் திரு. செல். இலகுநாதன் பேசுகையில், நாட்டில் அறிவு வளர்ச்சியை விருத்திசெய்வதில் மட்டும் சனசமூகநிலையங்கள் பாடுபடாது. உடல்வளர்ச்சிக்கான விளையாட்டுப்போட்டிகளை நடத்தி சகல துறைகளிலும் விருத்தி சய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்,

விழாவை முன்னிட்டு நடைபெற்ற நாடகம், கிராமிய சம்பாஷணை, பேச்சுபோட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

## இக்பால் இல்லம் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் இல்ல உதைபந்தாட்டப்போட்டி அண்மையில் நடைபெற்றபொழுது இக்பால் இல்லம், சாபி இல்லத்தை தோற்கடித்தது. இக்பால் இல்லம் 2 கோல்கள் போட்டது சாபி இல்லம் கோல் எதுவும் போடவில்லை இக்பால் இல்லத்தைச் சேர்ந்த சுகார்னே, ஒரு கோலையும், அபுல் முலப்பர் ஒரு கோலையும் போட்டிருந்தனர்.

# மனனப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி மனனப் போட்டி முடிவுகள்:

தராதரப்பத்திரமும் பரிசில்களும் பெறுபவர்கள் விபரம் வருமாறு:

மேற்பிரிவு-பெண்கள்

ஐ. இராசேஸ்வரி, கை.சரஸ்வதி, ந. பரமேஸ்வரி (இவர்கள் மூவரும் கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலையை சேர்ந்தவர்கள்) அ. திலகவதி சதானந்த வித்தியாசாலை, அளவெட்டி.

மத்தியபிரிவு ஆண்கள்

கு. தவராசசிங்கம் பாலர் ஞானோதயசபை, த. இராசேஸ்வரன்,

மத்தியபிரிவு-பெண்கள்

பொ. கனகேஸ்வரி சதானந்த வித்தியாசாலை, அளவெட்டி, கி. உலோகநாயகி ஸ்ரீசண்முக வித்தியாசாலை. இ. கமலாம்பிகை ஸ்ரீ சண்முக வித்தியாசாலை,

ஆரம்பபிரிவு-ஆண்கள்

வே. பாலசுப்பிரமணியம், பொ. சண்முகநாதன், க. புவனராசா (இவர்கள் மூவரும் பூநகரி நல்லூர் அ. த, க. பாடசாலை மாணவர்கள்), சே. மோகனராசா.

ஆரம்பபிரிவு-பெண்கள்

ந. சிவசிதம்பரம் பூநகரி நல்லூர் அ. த. க. பாடசாலை, இ. உலகராணி ஸ்ரீ சண்முக வித்தியாசாலை, த.ஞானவாணி.

ஆரம்பபிரிவு-பெண்கள்
(7 வயதுக்குட்பட்டவர்கள்)

சே. ரஜனி, த. ஞானமலர் (இருவரும் யாழ். தட்டாதெரு இந்து தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்தவர்கள்,) ஆ. குககுமாரி பூதர்மடம் அ. த. க. பாடசாலை.

தராதரப்பத்திரம் பெறுபவர்கள்.

மேற்பிரிவு பெண்கள்

சதானந்த வித்தியாசாலை அளவெட்டி: ச. சரஸ்வதி,

மத்தியபிரிவு பெண்கள்

கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை: மு. பொன்னுப்பிள்ளை, சி. பூமணி, ச. செல்வமலர், கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை: த. மகேஸ்வரி, பாலர் ஞானோதய சபை செ. நீலாம்பிகை.

ஆரம்ப பிரிவு ஆண்கள்

கோப்பாய் அரசினர் மகா வித்தியாலயம்: ஆ குகமூர்த்தி, ஆ. ஸ்ரீஸ்கந்த மூர்த்தி, யாழ். தட்டாதெரு இ. த. க. பாடசாலை: ப. பவானந்தன், வா. பாலு ஸ்ரீநாததேவா, அ. ஜீவானந்தன், க. மயில்வாகனம், ச. விஜயராகவன், த. யோகானந்தன், இ. ஞானகோபால், ப. இரத்தினகுமார், இ. வைகுந்தவாசன், க. அருணகிரிநாதன், ம. ஜெயகுமார் நா. பாலச்சந்திரன், த. தவராசா, க. ஸ்ரீகரன். பாலர் ஞானோதய சபை: ஆ. சிவஞானச் செல்வன், சோ. யோகேஸ்வரன், சே விக்கினராசா, சே. விஜயராசா

ஆரம்ப பிரிவு-பெண்கள்

யாழ் தட்டாதெரு இ த க பாடசாலை: ப ஞானாம்பிகை, ம இந்துமதி அனிதா, க நளாயினி, நா தனலட்சுமி, நா சந்தானலட்சுமி, இ கமலாம்பிகை, சதானந்தவித்தியாசாலை அளவெட்டி: அ சிவனேஸ்வரி, இ புவனேஸ்வரி, கோப்பாய் அரசினர் மகாவித்தியாலயம்: பொ. ஜெயந்தி, ச விமலா சோ. கோணேஸ்வரி, ச செந்தூர்ச் செல்வி. யாழ். பூநகரி-நல்லூர் அ த க பாடசாலை: கா கற்பகம், க இராசலட்சுமி, க புவனேஸ்வரி, நா சிதம்பரம். யாழ் - கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாசாலை: வே புவனேஸ்வரி, வ பூமணி, பாலர் ஞானோதய சபை தெல்லிப்பழை: ம ஞானகாந்தி, மு கீதாஞ்சலி, செ கமலாம்பிகை, யாழ்-கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை த புஷ்பராணி, வி தனலட்சுமி.

அரசாங்க விளம்பரம்

1965 ஆம் ஆண்டிற்கான புதுப் பிரவேச நிபந்தகனைள்.

1965- ஜனவரி மாதத்திலே இக்கல்லூரியில் (முதற்படிமை) 6-ஆம் வகுப்பு மாணவர் அனுமதிக்கப்படார்.

சாதாரண பொதுத் தாராதக் கலைப் பகுதி முதலாண்டு வகுப்புக்குச் சிலர் அனுமதிக்கப்படுவர்.

கல்லூரியின் மற்றைய வகுப்புக்களில் வெற்றிடங்கள் இல்லை.

மேற்படி சாதாரண பொதுத் தாராதரக் கலைப்பகுதியின் முதலாண்டு வகுப்பிற் சேர்ந்து படிக்க விரும்புவோர் அதற்கெனத் தரப்படும் விண்ணப்பப் பத்திரத்தில் கல்லூரிப் பதிவாளருக்கு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதிக்கு முன்னதாக மனுச்செய்தல் வேண்டும். குறிக்கப்பட்ட வெற்று விண்ணப்பப் பத்திரங்கள் கல்லூரிப் பதிவாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜேயல் கல்லூரி அதிபர்

ஊர்காவற்றுறை

பட்டினசபை

## கேள்வி விளம்பரம்

ஊர்காவற்றுறைப் பட்டின சபையால் 1964-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 17-ந் திகதி வரை பின்வரும் வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்,

1. சந்தையடியில் 172 அடிக் கான் கட்டுதல்.
2. சந்தையிலும் கடற்கரையிலும் இரண்டறைக் கக்கூஸ்—மலகூடம் கட்டுதல்.
3. தொத்திக்குளக் கிணறு திருத்தம்.
4. ஊர்காவற்றுறைச் சந்தைக்கும், கடைகளுக்கும் வெள்ளை அடித்தலும், மர வேலைக்கு மைபூசுதலும்.
5. மண்குளி ரோட்டுத் திருத்தம்.
6. களிக்குள வடக்கு எல்லை நடைபாதைக்கு மக்கி போடுதல்.
7. அக்கை தங்கைக் குள கிணற்றருகில் வக்குகள் கட்டுதல்.

மற்றும் விபரங்களை ஊர்காவற்றுறைப் பட்டினசபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர் ப, ச.

பட்டினசபைக் காரியாலயம்,
ஊர்காவற்றுறை,
30-9-1964 932

## தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம், மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநாதர்
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

ஈச்சமோட்டை

## சனசமூக நிலைய வருடாந்தக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 14-வது வருடாந்த பொதுக் கூட்டம் நிலையப் போஷகர் திரு. ஏ ரி. துரையப்பா தலைமையில், நிலைய மைதானத்தில் நடைபெற்ற போது புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

புதுவருட உத்தியோகத்தர்கள்: தலைவர்: திரு. ஏ. ே ய. பொன்னுக்கோன், உப-தலைவர்: திரு. ஏ. சி. மரியநாயகம், செயலாளர்: திரு. ஏ. கிறிஸ்ரி, உப-செயலாளர்: திரு. என். சிறிஸ்காந்தன், பொருளாளர்: திரு. எம். நிக்லஸ், உப-பொருளாளர்: திரு. கே. சண்முகராசா: நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் வி.பொன்னுத்துரை, என். பேரின்பராசா, எஸ். இம்மனுவேல், ஏ. பி. விஜயசிங்கம், சி. விஜயசிங்கம், சி. பாலச்சந்திரன், கே. எஸ். மந்தபாணி, ரி. குலசேரம்,



சமீபத்தில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட கச்சாய் கிராம சபைத் தலைவர் திரு. அ. த. சிதம்பரப்பிள்ளை.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரி, கல்லூரிகள், பஸ் நிலையம், புகையிரத நிலையம் ஆகியவைகளுக்கு அருகாமையில் 3 பரப்பு காணி கிணறும் வீடுகட்ட அத்திவாரமுடனும் ஆஸ்பத்திரி ரோட், சுண்டிக்குளியில் விற்பனைக்குண்டு. அதிக கூடிய விலைக்கு கொடுக்கப்படும். ஆ. யோவான்பிள்ளை, 43, இராசாவின் தோட்டம் ரோட், யாழ்ப்பாணம். 894

வீடும் வளவும் பரந்தன் முரசுமோட்டை ரோட்டில் விற்பனைக்கு உண்டு. விபரம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும். இ. குலசேகரம், முரசுமோட்டை ரோட், பரந்தன். 896

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு பொன்னம்பலம் பத்மநாதனின் தெருக்கரையில் உள்ள வளவுக்காணியும், வயல் காணியும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு பொ. பத்மநாதன், 79, சுங்க வீதி, திருக்கோணமலை என்ற விலாசத்துடன் தொடர்புகொள்க. 1003

### தேவை

ஆங்கில எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவரும், அனுபவமுமுள்ளவருமான ஒரு காஷியர் தேவை. விபரங்களுக்கு என், எஸ். கனகரத்தினம், மூளாய் தெற்கு, சுழிபுரம். 898

### கல்வி

ஜி. சி. ஈ. மார்கழி 1964. கலை, விஞ்ஞானம், வர்த்தகம், ஆங்கிலம், சிங்களம். தனிப் பாடங்கள் படிக்கலாம். காலை, மாலை வகுப்புகள். யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட். பெண்கள் கிளை: 29, பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 900

### வாடகைக்கு

பெரியகடை ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் 16-ம்நம்பர் கடை வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரம்: 417, தயாநிதி, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1002


## மாணவர்களின் மணல் ஆராய்ச்சி

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய விஞ்ஞானக் கழகத்தின் ஏற்பாட்டின்படி 75 மாணவ, மாணவிகள் கடற்கரையை அடுத்துள்ள பிரதேசங்களான தாளையடி, வல்லிபுரக்கோவில், அம்பன், குடத்தனை, நாகர்கோவில் ஆகிய இடங்களுக்கு சனிக்கிழமை ஒருநாள் சுற்றுப் பயணம் செல்லவிருக்கின்றனர். அங்கு இவர்கள் மணல் ஆராய்ச்சி செய்வதுடன் பல வகைப்பட்ட தாவர இனங்களையும் நீர்ப்பிராணிகளையும் சேகரிப்பர்,


## விஜயலெட்சுமி ஆபரண மாளிகை

ஆஸ்பத்திரி வீதி, — ஊர்காவற்றுறை.



சிறந்த
நகை உற்பத்தியாளர்களால்
அழகிய
வேலைப்பாடுகள் நிறைந்த
தங்கப் பவுண்
வைர நகைகளை

தற்காலத்திற்கேற்ற டிசைன்களில் தயார் செய்து உங்களை திருப்தி செய்யக் காத்திருக்கிறோம்.

எமது ஆபரண மாளிகைக்கு
ஒரு முறை விஜயஞ்செய்யுங்கள்.

## 'ஏற்றுமதிக் கம்பனிகளை தேசியமயமாக்குக'

கொழும்பு, வெள்ளி

தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகளுக்குச் சொந்தமான கட்டடம் மற்றும் பொருள்கள் எல்லாவற்றையும் தேசியமயமாக்குமாறு இலங்கை வர்த்தக சங்க சம்மேளனம் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக விநியோக மந்திரிக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

பல தேயிலை ஏற்றுமதிக் கம்பனிகள் அங்கு வேலைசெய்து வந்த ஊழியர்களை வேலைநீக்கம் செய்யத் தொடங்கிவிட்டன என்றும் அவர்கள் மந்திரிக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

## பாஸ்புத்தகம், உறுதிகள் களவு

மாவிட்டபுரம், வெள்ளி

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கனகர் பொன்னம்பலம் என்பவரின் வீட்டில் 1250 ரூபா ரொக்கமும், 1500 ரூபாய் பெறுமதியான இரண்டு பாஸ் புத்தகங்களும், உறுதிகளும் களவுபோய்விட்டதாக காங்கேசன் துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இப்பொருட்கள் வீட்டில் டிரங்குப்பெட்டியில் வைத்து பின்னர் ஒரு மரப்பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டிருந்ததாகவும், மரப்பெட்டி உடைக்கப்பட்டு டிரங்குப் பெட்டியை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது. வீட்டுச் சொந்தக்காரர்கள் தோட்டத்தில் இருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர்.


7வது வெற்றி வாரம்!

ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம்) போன்: 4 8 5

தினசரி 6-30 9-30க்கு மட்டும் சனி, ஞாயிறு 4 காட்சிகள்



பாலசர்மா ● அசோகன்

டி. கே. பகவதி ● நரசிம்மபாரதி

ஜெயஸ்ரீ ● விஜயலக்ஷ்மி

மற்றும் பலர் நடித்த

சம்பூர்ண மகாபாரதம்



REGAL — JAFFNA

NOW SHOWING

Loves of the World!

I LOVE YOULOVE

(Technicolor-Ultrascope)



## விநாயகர் மோட்டோர் வேர்க்ஸ்

### திறப்பு விழா

8-9-64ல் தீ விபத்தின் காரணத்தால் திருத்தி அமைக்கப்பட்டது.

அன்புடையீர்!

நிகழும் குரோதி ஸ்ரீ புரட்டாதி மீ 14-ந் திகதி(30-9-64) புதன்கிழமை காலை ஆரம்பமான ஷ விழாவை வெளியூர் நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இரண்டு நாட்கள் நீடித்துள்ளோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அவ்வேளையில் அன்பர்கள் அனுதாபிகள் அனைவரும் தமியேனை மகிழ்வித்தேகுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இங்ஙனம், உங்கள் அன்பையும் ஆதரவையும் நாடும் வ. கிருஷ்ணசாமி, விநாயகர்மோட்டோர் வேர்க்ஸ, கண்டி ரோட், சாவகச்சேரி. 1004



மங்களகரமான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

குயின்லன் (நுககொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை)



எம். ஜி. ராமச்சந்திரன்

பி. சரோஜாதேவி

மற்றும் பலர் நடிக்கும்

பணக்கார குடும்பம்


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

வடபகுதி அசைஸ்

# அராலி கிழக்கு கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை

## சாட்சியம் திருப்தியளிக்கவில்லையென ஜூரி சபையினர் தெரிவித்தனர்

யாழ்ப்பாணம், சனி

அராலி கிழக்கு கொலைவழக்கு நேற்றுக்காலை இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது விசாரணை நடுவில், ஜூரிசபையினர் 'சாட்சியம் திருப்தியளிக்கவில்லையென்றும் கூறி எதிரிகள் குற்றவாளிகள் அல்ல' வென்று ஏகமனதாகத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரிகள் இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

காயமடைந்தவரும் கண்கண்ட சாட்சியுமான ஆறுமுகம் ஐயாத்துரையிடம் 'உம்மை மூன்று மாதம் சிறைக்கு அனுப்பியிருப்பேன், உமக்கு காயமேற்பட்டிருப்பதால் அப்படி செய்யவில்லை' யென்று நீதியரசர் விசாரணை முடிவில் தெரிவித்தார்.

அராலி கொலை வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் நேற்றுக் காலை இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது துப்பாக்கி சூட்டினால் காயமடைந்தவராகிய ஆறுமுகம் ஐயாத்துரை சாட்சியமளித்தார்.

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் 1963 ஜூலை 26-ம் திகதி அராலி கிழக்கில் வல்லிபுரம் ராசரத்தினம், வல்லிபுரம் நாகேசு ஆகியோர் சின்னப்பு வெற்றிவேலாயுதர் என்பவரை கொலை செய்ததாகவும், அதே இடத்தில் அதே நேரத்தில் ஆறுமுகம் ஐயாத்துரை என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சட்டவைத்திய அதிகாரி திரு. டாக்டர் வைத்திலிங்கத்தை எதிரிகளின் வழக்கறிஞர்கள் குறுக்கு விசாரணை செய்தார்கள்.

அதன்பின் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். அமிர்தலிங்கம் சாட்சியமளித்தார்.

### காயமடைந்தவர் சாட்சியம்

காயமடைந்தவரும் கண்கண்ட சாட்சியுமான ஆறுமுகம் ஐயாத்துரை சாட்சிக் கூண்டிற்கு வெளியில் கதிரையில் இருந்து கொண்டு சாட்சியமளித்தார்

1-ம் எதிரியின் வழக்கறிஞர் திரு. எல். சரவணமுத்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ- கீழ் கோர்ட்டில் டாக்டரும் சாட்சி சொன்னார் என்று உமக்குத் தெரியும்-ஆம்.

வழ-அப்பொழுது உமது சொந்தக்காரர் கீழ் கோட்டில் விசாரணையை பார்த்தார்கள் - ஆம்.

வழ- அவர்கள் வந்து உமக்கு வழக்கை சொல்லிக் கொடுத்தார்களா? - (மௌனம்)

வழ- கீழ் கோட்டில் வழக்கறிஞரை வழக்காளி சார்பில் ஏற்படுத்தினீர்களா - ஆம்.

நீதி- கெட்டிக்காரரா? - பெயர் தெரியாது (கொஞ்சநேரத்தில்) கண்ணுத்துரை.

நீதி- அவர் வீட்டிற்கு வழக்கு அடுக்குப் பண்ணப் போனீரா? - நான் போகவில்லை.

நீதி- அப்போ அவரை சும்மா ஏற்படுத்தினீர்களா? - (மௌனம்) நாளைக்கு வழக்கு தவணை என்றால் முதல் நாள் இரவு அப்புக்காத்து வீட்டிற்கு போய் வழக்கு அடுக்கு பண்ணுவது வழக்கம்? - நான் போகவில்லை.

நீதி- கண்ணுத்துரை வீட்டிற்கு நீங்கள் போகவில்லையென்று சத்தியம் பண்ணிச் சொன்னாலும் நான் நம்பமாட்டேன்? - போகவில்லை.

வழ- நேற்று டாக்டர் இங்கு சாட்சியமளிக்கும் போது உமது மச்சான் நடராசா வந்திருந்தார்? - எனக்கு தெரியாது.

நீதி- இன்று வந்திருக்கிறாரா? - (சாட்சி எழுந்து பார்த்துவிட்டு) இல்லை.

வழ- 1-ம் எதிரி துப்பாக்கியால் யாரைகுறித்தும் இலக்குப் பார்த்தார்? - இறந்தவரை.

வழ- உமக்கல்ல? - ஆறுபேரையும் பார்த்து இலக்குவைத்தார்.

வழ- கீழ்கோட்டில் என்னை நோக்கி இலக்கு வைத்தார்கள் என்றிரா? - ஞாபகமில்லை

நீதி- கீழ் கோர்ட்டில் நீர் அளித்த வாக்கு மூலம் இது. கையெழுத்து வைத்திருக்கிறீர் அப்பொது நல்ல ஞாபகம் இருந்திருக்கும்? - நடுக்கம் இருந்தது படபடப்புஇருந்தது.

நீதி- அறிவைப் பொறுத்தவரை ஏதாவது இருந்ததா? - இல்லை.

நீதி- எதிரிகள் நின்றார்கள் என்கிறீரா? - ஞாபகமில்லை சொல்லியிருப்பேன்.

நீதி- நான் என்ன பொய்யா வாசிக்கின்றேன். எழுதியதை தான் வாசிகின்றேன். உமது சாட்சியத்தை வாசிக்கிறேன டாக்டரின் சாட்சியத்தின் படி நின்று கொண்டு சுட்டிருந்தால் அப்படியான காயம் ஏற்பட்டிருக்காது.

வழ: எதிரிகளில் யாராவது டோர்ச்லைட வைத்திருந்தார்களா? -எதிரிக்குப் பின்னால் ஒருவர் டோர்ச்லைட் வைத்திருந்தார். அவரை எனக்கு அடையாளம் காணமுடியவில்லை 1 ம் எதிரி லைட வைத்திருக்கவில்லை.

வழ: பொலிஸ வாக்குமூலத்

(2-ம் பக்கம் பார்க்க)

## நேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப முடிவுகள் வருமாறு:-

முதற் பரிசு

19 V 0353 ரூபா 50,000

இரண்டாம் பரிசு

10 W 0187 ரூபா 17,000

மூன்றும் பரிசு

13 S 0664 ரூபா 7,000

தலா 375 ரூபா பெறும் 100 டிக்கட்டுகளின விபரம்:-

| | | |
|---|---|---|
| 11 D 0988 | 06 J 0581 | 19 Z 0874 |
| 04 W 0813 | 05 V 0986 | 07 E 0823 |
| 20 P 0131 | 20 Y 0504 | 16 N 0519 |
| 06 H 0569 | 23 F 0913 | 19 P 0393 |
| 20 D 0414 | 05 Y 0801 | 08 B 0106 |
| 10 Y 0059 | 08 K 0713 | 16 V 0735 |
| 21 K 0941 | 03 E 0818 | 18 Z 0867 |
| 22 Q 0896 | 09 Z 0110 | 17 H 0501 |
| 23 H 0261 | 18 X 0313 | 01 W 0809 |
| 17 A 0558 | 15 G 0789 | 11 T 0930 |
| 10 R 0869 | 19 A 0125 | 18 Z 0728 |
| 20 O 0074 | 09 M 0301 | 07 L 0347 |
| 18 K 0738 | 16 O 0534 | 14 J 0317 |
| 12 Z 0553 | 02 Z 0367 | 17 D 0180 |
| 01 M 0959 | 14 M 0498 | 01 Y 0561 |
| 08 M 0902 | 06 R 0770 | 16 X 0118 |
| 04 T 0436 | 15 C 0224 | 12 F 0846 |
| 03 K 0473 | 15 L 0819 | 22 M 0696 |
| 16 H 0137 | 17 G 0366 | 18 P 0792 |
| 16 S 0563 | 14 W 0315 | 20 V 0034 |
| 13 K 0463 | 21 V 0792 | 19 W 0223 |
| 11 E 0449 | 14 D 0947 | 02 W 0221 |
| 12 U 0683 | 14 W 0223 | 09 O 0253 |
| 13 M 1000 | 14 J 0539 | 02 X 0131 |
| 03 S 0238 | 14 P 0767 | 20 R 0147 |
| 04 O 0417 | 09 U 0912 | 13 W 0911 |
| 01 O 0026 | 16 N 0697 | 10 P 0622 |
| 03 L 0919 | 21 J 0302 | 06 M 0151 |
| 11 N 0825 | 11 S 0538 | 07 Z 0694 |
| 07 X 0115 | 08 T 0236 | 03 N 0168 |
| 13 E 0751 | 16 J 0131 | 04 L 0483 |
| 10 O 0741 | 03 F 0707 | 21 W 0176 |
| 20 U 0030 | 10 Z 0772 | 05 P 0344 |
| | 23 M 0892 | |

கட்டுநாயக, வெள்ளி

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலிருந்து மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட தொழிற் சங்க வாதிகள் தூதுகோஷ்டியொன்று சென்ற புதன்கிழமை காலை இலங்கை வந்து சேர்ந்தது.

## மூன்று மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளப் பகுதியில் பால்ய குற்றவாளிகள் கூடிக்கொண்டேவருகிறார்கள். பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் கூட பல விதமான திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர். இப்படியாக வாலிபர்களும், மாணவர்களும் திருட்டுக குற்றங்களுக்குள்ளாவதைத் தடுக்க பெரியோர்கள் முன்வரவேண்டும், இவர்களின் நலனைக் கவனிக்கக் கூடியவர்கள் எல்லாரும்கலந்துமாணவர்களிடையேயும், வாலிபர்களிடையேயும் நல்லொழுக்கம் உண்டாக்கவும், அவர்களை நல்வழிப்படுத்தவும் முயல வேண்டும்.

அரசாங்க பாடசாலைகள் சிலவற்றில் ஆசிரியர்கள் மாணவர்கள மீது அக்கறை காட்டுவதில்லை எனப் பல பெரியோர்கள் என்னிடம் முறையிட்டுள்ளார்கள். தங்கள் தொழிலை சரிவரச் செய்வதில் சில ஆசிரியர்கள் அக்கறை எடுக்காதது நாட்டின் வளர்ச்சிக்கு பெரும் இடையூறாகவிருக்கிறது. அறிவைப் புகட்டவே பாடசாலைகள் இயங்குவது உண்மை எனினும் நாட்டின் வருங்கால பிரஜைகளை நற்பிரஜைகளாக உருவாக்குவதே பாடசாலைகளின முக்கிய கடமையாகும்."

## தமிழிசை விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அண்ணமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழிசை விழா இன்று தொடர்ந்தும் நடைபெறும். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் பாரதிதாசன் அரங்கில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகள் விபரம்:-

மாலை 5-30—6-00 அண்ணமலை இசைத் தமிழ் மன்றக் கல்லூரி மாணவர் மிருதங்கம், செல்வி ஞானம்பிகை முருகேசு வயலின், 6-00—6-15 சாரியாதிகாரி திரு. செ. சிவஞானம் ஆசியுரை 6-15—7-15 சங்கீத பூஷணம் க. குமாரசாமி பாட்டு, 7-15—8-15 சங்கீத பூஷணம் ஆ. நமசிவாயம் பாட்டு, 8-15—9-15 சங்கீத பூஷணம் க. பேரம்பலம்பாட்டு, 9-15-10-15 வைத்திய கலாநிதி. கங்காதரன் வேய்ஙகுழல், 10-15 சங்கீத பூஷணம் ஜெயலட்சுமி சதாசிவம் பாட்டு.

## செபமாலைமாதா தேவாலயம்

### இவ்வருட மகோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

கொழும்புத்துறை அர்ச். செபமாலைமாதா தேவாலயத்தில், சனிக்கிழமை பத்தியை அனுசரிப்பதற்கு வெளியிடங்களிலிருந்து ஏராளமானவர்கள் இங்கு வந்துகொண்டிருக்கின்றனர். இவ்வருட மகோற்சவம் கடந்த மாதம் 26-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்று மாலை திருச்சற்பிரசாத சுற்றுப் பிரகாரமும் ஞாயிற்றுக்கிழமை காலை பெரிய பாடற் பூசையும் அதைத் தொடர்ந்து திருச்சுருப சுற்றுப் பிரகாரத்துடனும் வைபவமும் நடைபெறும்.

## முஸ்லிம் விழா

கொழும்பு, வெள்ளி

இஸ்லாமிய கலாச்சார மகாநாடு இன்று கின்னியாவில் ஆரம்பமாகிறது மூதூர் இரண்டாவது எம். பி. திரு. மஜீத் தலைமைவகிப்பார். முஸ்லிம் கலைஞர்கள், எழுத்தாளர்கள் இவ் விழாவில் கௌரவிக்கப்படுவார்கள்.